பொது நிர்வாக சுற்றறிக்கை : 10/2012(III)

எனது இல : CS/DOS/02/05/01
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
2017.08.14

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்கள்/
மாவட்டச் செயலாளர்கள்/
பிரதேச செயலாளர்களிற்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக்குறிப்பை நடைமுறைப்படுத்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2015.05.08 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2012, 2012.06.21 ஆந்திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2012 (I) மற்றும் 2016.04.04 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2012(II) என்பவை பற்றி உமது அவதானத்திற்கு கொண்டு வருகிறேன்.

02. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பின் கீழ் அச்சேவையில் உள்ளீர்ப்பு செய்வதற்காக இதற்கு முன் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட இறுதி திகதியான 2016.05.31 ஆந் திகதி வரை விருப்பை தெரிவிக்கும் சந்தர்ப்பத்தை இழந்த எனினும் சேவைப்பிரமாணக் குறிப்பு வலுப்பெறும் 2011.08.01 ஆந் திகதிக்கு அரச சேவையில் கடமையாற்றிய MN4-2006(A) சம்பள திட்டத்தில் சம்பளம் பெறும் பட்டதாரி அலுவலர்களிற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்ய விருப்பை தெரிவிப்பதற்கான அவகாசம் இத்தால் மீண்டும் வழங்கப்படுகிறது.

03. மேலும் MN4-2006(A) சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் பதவியில் 2011.08.01 ஆந் திகதியில் மத்திய அரச சேவையில் சேவையாற்றிய மற்றும் அதன்பின் பொது நிர்வாக சுற் றறிக்கை இல. 16/2010(I) இன் படி அரச சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இடமாற்றம் பெற்று கடமையாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்களிற்கும் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

04. மேலே 02 மற்றும் 03 ஆம் பந்தியின் கீழ் உள்ளீர்ப்பு செய்வதற்கான விருப்பை தெரிவிக்க வேண்டிய இறுதி திகதி **2017.09.30** ஆகும்.

05. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட இச்சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் தற்போது விருப்பை தெரிவித்துள்ள மற்றும் விருப்பை தெரிவிக்கவுள்ள அலுவலர்களிற்கு தமது விருப்பு தெரிவை கேட்டு விலக்கிக் கொள்ள சந்தர்ப்பமேதும் இல்லை என்பதையும் அவ் அனைத்து அலுவலர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு